# ‘கலாவிநோதன்’ பாலசுகுமார்

ஆழத்து முத்துக்கள் 143

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

ஈழத்தில் ஆடப்படும் நாட்டுக்கூத்துக்களில் உள்ள நடன வடிவங்களை இணைத்து ‘ஈழநாட்டியம்’ என்ற நடனத்தையும் கூத்திசைப் பாடல்களினதும் ஆட்ட முறைமைகளினதும் பல்வேறு பரிமாணங்களைக் கோர்த்து ‘இன்னியம்’ என்ற இசையையும்

உருவாக்கியதுடன் அவற்றை ஈழத் தமிழர்களுக்கான நடனமாகவும் இசையாகவும் அடையாளப்படுத்தி ஆற்றுகை செய்து வருபவர் கலைஞர் பாலசுகுமார் அவர்கள். நடிகர், நெறியாளர், கூத்துக்கலைஞர், எழுத்தாளர், ஆய்வாளர், பல்கலைக்கழக பீடாதிபதி என்ற பன்முக ஆளுமை மிக்க இந்தக் கலைஞனை ஆழத்து முத்துக்களில் பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர்ப் பகுதியிலுள்ள சேனையூர் என்ற கிராமத்தில் பாலசிங்கம் தெய்வநாயகம் இணையரின் புதல்வனாக 1955ல் சுகுமார் பிறந்தார். கஷ்டமான சூழ்நிலையிலும் வளர்த்து ஆளாக்கிய தன் தந்தையாரை என்றும் நினைவு கொள்ளும் விதமாக பாலசுகுமார் என்று தன்னை அழைத்துக் கொண்டார். சேனையூர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் முதன்முறையாக அவ்வித்தியாலத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மூவரில் ஒருவரானார். யாழ்.பல்கலைக்கழகத்தில் B.A (Hons) பட்டத்தையும், இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் அரங்கியல் கலையில் M.A பட்டத்தையும் பெற்றுச் சிறந்த கல்விமானாகத் திகழும் இவர் தனது முன்னேற்றத்துக்குப் பேருதவி புரிந்த அதிபர்கள் செ. நடராஜா, செ. கதிர்காமத்தம்பி, டி.ஜி. சோமசுந்தரம் (மாமனார்) மற்றும் பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோரை இங்கு நினைவு கொள்கிறார்.

யாழ். பல்கலைக்கழத்தில் பட்டம் பெற்ற பின்னர் பொலநறுவை மாவட்டத்திலுள்ள சுங்காவில முஸ்லிம் மகாவித்தியாலயம், கல்லல முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றிப் பின்னர் தான் கல்வி பயின்ற சேனையூர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இந்நாட்களில் தான் சேனையூர், சம்பூர் பகுதிகளில் அரச படைகளால் ‘கொலக்கொட்டியா’ என்ற பெயரில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட துயர சம்பவங்கள் நிகழ்ந்தன. இப்படுகொலைகளுக்கு அஞ்சி மனைவியுடனும் ஒரு மாதக் கைக் குழந்தையுடனும் இவர் ஒரு மாதம் காடுகளுக்குள் ஒளித்து வாழ நேரிட்டது. இந்த அவலத்திலிருந்து விடுபட்டு இந்தியாவிலுள்ள மதுரை அரசரடி இறையியற் கல்லூரியில் குடும்பத்துடன் தஞ்சம் புகுந்தார்.

மண்ணின் மீதான அதீத பற்றுதலால் திரும்பிவந்த பாலசுகுமார் திருகோணமலை விபுலானந்தர் வித்தியாலயத்தின் அதிபராக பதவியேற்றார். இதன் பின்னர் கிழக்குப் பல்கலைக் கழத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளர், விரிவுரையாளர், நுண்கலைப் பீடத்தின் தலைவர், இணைப்பாளர் என்று படிப்படியாக முன்னேறி 2004 இலிருந்து 2006 வரை நுண்கலைப் பீடத்தின் பீடாதிபதியாக உச்சம் பெற்றார்.

இவரது மனைவியின் பெயர் பிரமிளா - இவரது நாடகங்களுக்கான ஒப்பனை, உடை, மேடையலங்காரங்கள் முதலிய வற்றைச் செய்து வருகின்றார். மகள் அநாமிகா. மகன் அநாமிருதன். தந்தையின் எண்ணங்களைச் செயற்படுத்தி வந்த மகள் அநாமிகா தந்தையாரிடமும், பேராசிரியர் மௌனகுரு அவர்களிடமும் கூத்துக்கள் பயின்று ‘கூத்தரங்கேற்றம்’ செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்துவந்தார். அதனது முன்னோடியாக 2004ல் மட்டக்களப்பில் நடைபெற்ற ‘உலக நாடக தின விழா’வில் ஒரு மணி நேரம் ஈழநாட்டியத்தை நிகழ்த்தியிருந்தார். மட்டக்களப்பு தேவாலயத்தில் தங்கியிருந்த போது அநாமிகா துரதிஷ்டவசமாக சுனாமிப் பேரலைகளுக்குப் பலியானார். அப்போது அவருக்கு வயது 14.

தனது ஒன்பதாவது வயதிலே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்த பாலசுகுமார் பாடசாலை நாடகங்களிலும் மற்றும் ஊர் விழாக்கள் பௌர்ணமி கலைவிழாக்கள், சிவராத்திரி விழா, சேனையூர் வர்ணகுலப் பிள்ளையார் கோயில் திருவிழா போன்றவற்றில் நடைபெறும் நாடகங்களிலும் பங்கேற்றார். துரோகி, கடவுள் வந்தார் போன்ற பல நாடகங்களை ஆரம்ப காலங்களில் எழுதிய இவர் பின்னாட்களில் மிகவும் தீவிரமான நாடகங்களை எழுதினார்.

இவரது அரங்கியல் பிரவேசத்துக்கு மூல காரணமாக விளங்கியவர் இவரின் சிறிய தந்தையரான கலாபூஷணம் வீரசிங்கம் அவர்களே. வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து போன்ற கலைகளில் புகழ்பூத்த அந்தக் கலைஞரின் அரவணைப்பில் கிராமியக் கலைகள் பற்றிய அனுபவத்தையும், அறிவையும் பாலசுகுமார் பெற்றுக் கொண்டார். மேலும் கூத்தில் அதிக ஈடுபாடு வருவதற்கு சேனையூரில் நடைபெறும் கும்பம் விழாவும் முக்கிய காரணியாகும். கும்பம் விழாவில் வீரபத்திரர், காளி, வைரபர், மாரியம்மன் போன்ற காவல் தெய்வங்கள் போன்ற உடையணிந்த ஆண்கள் தம்மை அந்தந்த தெய்வங்களாகவே உருவகித்து கும்பங்களைச் சுமந்தவாறு வெவ்வேறு வீதிகளில் உலா போவர். எமது பாரம்பரிய இசையான பறை, உடுக்கு போன்ற வாத்தியங்கள் முழங்க வீதிகளில் அவர்களது ஆட்டங்கள் நிகழும். அந்தந்தத் தெய்வங்களுக்குரிய ஆட்டங்களாக அவை அமையும். இதற்காக அவர்கள் பயிற்சிகள் எடுப்பதில்லை. இவ்வாறு கும்பத்துடன் செல்லும் காவல் தெய்வங்களை எதிராளிகள் மந்திரித்து அடக்குவர். இவ்வாறு ஒவ்வொரு தெய்வமாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு கும்பம் விழா முடிவுக்கு வரும்.

கும்பம் விழாவின் பாதிப்பினால் பாலசுகுமார் சிவதாண்டவம் பழகி ஏற்கனவே நடனம் பயின்ற நர்த்தகி ஒருவருடன் மேடையில் போட்டிக்கு ஆடியது நினைவு கொள்ளத் தக்கது. சங்கீதபூஷணம் வர்ணகுலசிங்கம் அவர்கள் அந்நடனத்துக்குரிய பாடலைப் பாடியிருந்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பயிலும் நாட்களில் பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், க.கைலாசபதி, அ.சண்முகதாஸ், சி. மௌனகுரு ஆகியோருடனான தொடர்பு காரணமாக தமிழ் நாடகம் சம்பந்தமான புதிய சிந்தனை, தமிழ் இலக்கியங்களை நாடகமாகப் பார்த்தல், நவீன நாடகங்கள் பற்றிய அறிவு என்று பாலசுகுமாரின் அரங்கியல் குறித்த பரிணாமத் தேடலுக்கு வழிவகுத்தது. அந்நாட்களில் பேராசிரியர் சி. மௌனகுருவின் இயக்கத்தில் சங்காரம், புதியதொரு வீடு, ஆதிமானுடன், மாணவா என்ற நாடகங்களில் இவர் பங்கேற்றார்.

இதன் பிற்பாடு தான் கற்பித்த பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் மாணவர்களைக் கொண்டு காத்திரமான பல நாடகங்களைத் தயாரித்து நெறியாழ்கையும் செய்திருந்தார். சுந்தரலிங்கத்தின் ‘அபசுரம்’ மகாகவியின் ‘புதியதொரு வீடு’, மௌனகுருவின் ‘சங்காரம்’, அம்பையின் ‘ஆற்றைக் கடத்தல்’, சேக்ஸ்பியரின் ‘யூலியஸ் சீசர்’, வ. ஆறுமுகத்தின் ‘கருஞ்சுழி’ என்பன இவர் மேடையேற்றிய குறிப்பிடத்தக்க நாடகங்கள் ஆகும். இவற்றில் ‘கருஞ்சுழி’ நாடகம் கிழக்குப்பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், திருகோணமலை என மூன்று இடங்களில் மேடையேற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது. அரங்கியலின் பல்வேறு கூறுகளைப் பயிலும் நோக்கில் இவர் இந்திய தேசிய நாடகப்பள்ளியில் இணைந்து அரங்கியல் கற்கைநெறியைப் பயின்றார். 40 நாட்கள் நடைபெற்ற இக்கற்கைநெறியில் தற்போது இந்தியாவில் பிரபலமாக இருக்கும் நாடகக் கலைஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. அதில் பேராசிரியர் இராமானுஜத்தின் ‘செம்பவளக்காளி’ என்ற நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்.



இளவயதிலிருந்தே நாடக எழுத்து கைவரப் பெற்ற பாலசுகுமார் பல நாடகங்களை எழுதி மேடையேற்றினார். கடவுள் வந்தார், சூழலைக் காப்போம், மானுடம் வென்றதம்மா, மனிதன் எங்கே, பாரதி பிடித்த தேர்வடம், புழுவாய்ப் பிறக்கினும், சாபவிமோசனம், அநீதிகள், குறிஞ்சிப் பாட்டு என்பன இவர் எழுதிய நாடகங்களிற் சிலவாகும். தமிழ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நாடகப் போட்டியில் இவர் எழுதிய ‘மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்’ என்ற நாடகம் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது. பெரிய அளவிலான ஓவியங்களைப் பின்புலமாகக் கொண்ட மேடையில் இந்நாடக அளிக்கை இடம்பெற்றிருந்தது. மேலும் சிறுவர் தினத்துக்காக அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற நாடகப் போட்டியில் இவர் எழுதிய ‘எங்களை வாழவிடுங்கள்’ நாடகமும் முதற்பரிசினைப் பெற்றது. இவர் எழுதிய நாடகங்கள் ‘பாலசுகுமார் நாடகங்கள்’ என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் காலத்தில் இவர் பேராசிரியர் சி. மௌனகுருவுடன் இணைந்து மேடைநாடகம், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அவர் விரிவுரையாளராகப் பணியாற்றியபோது ‘ராவனேசன்’ என்ற நாடகத்திலும் பீடாதிபதியாகக் கடமைபுரிந்த நாட்களில் ‘லயம்’ என்ற இசை நடனத்திலும் பாத்திரங்கள் ஏற்றுச் சிறப்புச் செய்தார். மேலும் வானொலி, தொலைக்காட்சி (ரூபவாஹினி) க்காக கண்ணகி குளிர்த்தி, கிழக்கிசை, குறிஞ்சிப்பாட்டு, இராவணேசன் நாட்டுக்கூத்து என் பவற்றில் பங்குபற்றியதுடன் உதவி இயக் குனராகவும் பணியாற்றினார்.

இவை தவிர, ஈழத்தமிழர்களின் நாடக வரலாற்று நூல்கள் பலவற்றை பாலசுகுமார் எழுதி வெளியிட்டுள்ளார். அநாமிகா வெளியீடாக இவரது நூல்கள் பதிக்கப்பட்டுள்ளன. திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம், தமிழில் நாடகம், ஈழத்தமிழர் இசையும் நடனமும், The Traditional Music and Dance of Eezham Tamil’s மற்றும் கொட்டியாரம், ஈழநாட்டியம், சூர்ப்பனகை இடதுகை வாங்கிய ராவண தபசு, தம்பலகாமம், ஈழத்தின் கண்ணகி கலாச்சாரம், உலக நாடக வரலாறு, கரைகள் கடந்து என்பன வெளிவந்த இவரது நூல்களில் சிலவாகும். இவை தவிர தன் மகளின் நினைவாக தேவதையின் கிறுக்கல்கள், சின்னத் தேவதை, அநாமிகா, அநாமிகா (ஆங்கிலம்) மேலும் தன் தந்தையைக் குறித்த ‘அப்புச்சி கதை வரலாறு பண்பாடு’ ஆகிய நூல்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.


அத்துடன் நாடகம், கூத்து, இசை, வரலாறு சம்பந்தமாக பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துடன் இவர் பல நினைவுப் பேருரைகளையும் ஆற்றியுள்ளார். மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இவர் பங்குபற்றியதுடன் இவ்வருடம் மலேசியாவில் இடம்பெற்ற 9வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ‘சிவாஜி கனேசன் - நடிப்பும் முறைமைகளும்’ என்ற ஆராய்ச்சிக் கட்டுரையையும் சமர்ப்பித்திருந்தார்.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இலண்டனுக்குக் குடிபெயர்ந்த பாலசுகுமார் ஈழத்தவர் இசையை ‘இன்னியம்’ என்ற பெயரில் லண்டன், பாரிஸ், ஒஸ்லோ ஆகிய உலக நகரங்களில் மேடையேற்றினார். இதேபோல் லண்டனில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழியல் மாநாட்டில் ‘ஈழநாட்டியம்’ என்ற ஈழத்தமிழர்களுக்கான நாட்டியத்தையும் அரங்கேற்றினார்.

இவரது கலைச்சேவையைப் பாராட்டி இலண்டனில் இயங்கிவரும் ஈழவர் திரைக்கலை மன்றத்தினர் இவருக்கு ‘கலாவிநோதன்’ என்ற பட்டத்தையும், சிவயோக அமைப்பினர் ‘கிராமிய கலைச்செல்வன்’ பட்டத்தையும் வழங்கி கௌரவம் செய்துள்ளனர்.

தற்போது தான் பிறந்த சேனையூரில் ‘களரி’ என்ற நூல் நிலையத்தையும், ஈழத் தமிழரின் கலைகளை வளர்க்கவும், அவற்றை ஆவணப்படுத்தும் முகமாக ‘அநாமிகா சமூக மேம்பாட்டுக் கழகம்’ என்ற அமைப்பையும் உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக உழை த்து வருகிறார்.

மணிவிழா காணும் கலைஞனை ‘தாய் வீடு’ வாழ்த்துவதில் பெருமை கொள்கிறது.



sriskandan@thaiveedu.com